சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 15.02.2019

# அவசரக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம் மாசி மாதம் 03–ம் நாள் (பிப்ரவரி திங்கள் 15–ம் நாள்:–15.02.2019) வெள்ளிக் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.01**

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.28368/ஜே3/2018, நாள்.22.11.218–இன்படி, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சின்னமனூர் நகராட்சியில் தனியார் மூலம் 49 துப்புரவு பணியாளர்கள் (Out Sourcing) பணி மேற்கொள்ள அனுமதி அளித்ததை தொடர்ந்து அதற்கான செலவினத்திற்கு மன்ற தீர்மான எண்.544, நாள்.14.12.2018–இல் ரூ.7072328/–இல் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு 30.01.2019–ஆம் அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. M/s Relyon Facility Services Pvt., Ltd, Chennai- ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.394/–
2. M/s Trustus Outsourcing Solution Pvt., Ltd, -ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.396/–

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு தனியார் மூலம் (Out Sourcing) 49 துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன்படி M/s Reylon Facility Services Pvt., Ltd, Chennai என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.394/– விலைப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். (ந.க.எண்.4998/2018/எச்1).** |
| **தீர்மான எண், நாள்** | **593, நாள்.15.02.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.02**

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 21.01.2019ம் தேதிய ந.க.எண்.1191/பி3/2019 எண் செயல்முறைகளின்படி, 2018–19ம் ஆண்டிற்கான திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூ.27.00 இலட்சம் மதிப்பீட்டில் 15 எண்ணம் Battery Operated Vehicle வாங்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு 11.02.2019ம் அன்று வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | M/s பிரியம் இன்டஸ்ரீஸ், சென்னை | ரூ.2697000.00 |
| 2. | M/s அருண் இந்தியன் மோட்டார்ஸ், சேலம் | ரூ.2692500.00 |

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை சரி பார்த்ததில், M/s பிரியம் இண்டஸ்ட்ரீஸ், சென்னை நிறுவனத்தினர் வைப்புத் தொகை செலுத்தவில்லை. மேலும், ஏற்கனவே 8 எண்ணம் Battery Operated vehicle விநியோகம் செய்த நிறுவனமான M/s அருண் இந்தியன் மோட்டார்ஸ், 5, காந்தி ரோடு, சேலம் அவர்களின் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவாக ரூ.2692500/– (ரூபாய் இருபத்து ஆறு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) விலைப்புள்ளி கோரியதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7867–1/2015/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **594, நாள்.15.02.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

## பொருள் எண்.03

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 21.01.2019ம் தேதிய ந.க.எண்.1191/பி3/2019 எண் செயல்முறைகளின்படி, 2018–19ம் ஆண்டிற்கான திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூ.5.60 இலட்சம் மதிப்பீட்டில் 1 எண்ணம் Light Commerical Vehicle வாங்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு 11.02.2019ம் அன்று வரப்பெற்ற 3 ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | M/s ABT Industries Limited, Coimbatore | ரூ.559950.00 |
| 2. | M/s Krysttal Motors Private Ltd, Salem | ரூ.552300.00 |
| 3. | M/s Lakshmi Auto Diesel Works, Metturdam | ரூ.544965.00 |

அலுவலகக் குறிப்பு:– **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை சரி பார்த்ததில் வரிசை எண்.2 மற்றும் வரிசை எண்.3–இல் கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிக்கான வைப்புத் தொகை செலுத்தப்படவில்லை. மேலும், ஏற்கனவே 3 எண்ணம் Light Commercial vehicle விநியோகம் செய்த நிறுவனமான M/s ABT Industries Limited, Coimbatore அவர்களின் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவாக ரூ.559950/– (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) விலைப்புள்ளி கோரியதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7867–1/2015/இ1)**

தீர்மான எண், நாள் **595, நாள்.15.02.2019**

தீர்மானம் **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.04

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் நகராட்சி பகுதிகளில் உள்ள 27 வார்டுகளில் இரண்டாம் நிலை சேகரிப்புக்கு (Secondary Collection) பயன்படுத்தப்படும் டம்பர் பிளேசர் வாகனத்திற்குரிய பெட்டிகள் பழுதடைந்து மிக மோசமாக பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் நகராட்சி பகுதிகளில் தேங்கும் குப்பைகளை அப்புறப்படுத்துவதில் சிரமம் ஏற்படுவதுடன் சுகாதாரம் பாதிக்கும் சூழ்நிலை நிலவுவதால் புதியதாக 12 எண்ணம் டம்பர் பிளேசர் வாகனத்திற்குரிய பெட்டிகள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.8.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.0537/2019/எச்1).**

தீர்மான எண், நாள் **596, நாள்.15.02.2019**

தீர்மானம் **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.05**

இந்நகராட்சியில் காலியாக உள்ள நகரமைப்பு ஆய்வாளர் பணியிடத்தை பூர்த்தி செய்ய அரசாணை எண்.44, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்.11.03.2015ன்படி இரண்டு தினசரி நாளிதழில் 12.01.2019 அன்று விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ.23310/– தமிழக நியூஸ் மற்றும் ரூ.10660/– மக்கள் குரல் தினசரி நாளிதழுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2751/2018/சி1).

**தீர்மான எண், நாள்** **597, நாள்.15.02.2019**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.06**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் நகராட்சிக்குச் சொந்தமான பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகள் (1+9) மொத்தம் 10 இயங்கி வருகின்றன. மேற்படி பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள கழிவறைகளை நல்லமுறையில் பராமரிக்கும் பொருட்டு அரசாணை (நிலை) எண்.77, பள்ளிக் கல்வி (ப.க.4(1)த்துறை) நாள்.13.04.2015 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் 26.10.2017ம் நாளிட்ட ந.க.எண்.32050/2016/ஜே2 எண் கடிதத்தில் ஆணைகள் மற்றும் அறிவுரைகள் பிறப்பிக்கப்பட்டன. அதன் அடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 1 அரசு பள்ளி மற்றும் 9 எண்ணம் ( தொடக்கப்பள்ளி 5, நடுநிலைப்பள்ளி 3, மற்றும் உயர்நிலைப்பள்ளி 1) நகராட்சி பள்ளிகள் ஆக மொத்தம் 10 பள்ளிகளில் உள்ள கழிவறைகளை சுத்தமாக பராமரிக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி திரு.ஆர்.பரமானந்தன் என்ற ஒப்பந்ததாரருக்கு 01.03.2018 முதல் 28.02.2019 முடிய உள்ள ஓராண்டு காலத்திற்கு நாள் ஒன்றிக்கு நபர் ஒன்றிக்கு ரூ.399/– என்ற தொகைக்கு 12 துப்புரவு பணியாளருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. ஒப்பந்த கால முடிவடைய உள்ள நிலையில் 2019–ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளதால் பள்ளியில் பயிலும் குழந்தைகளின் நலன் கருதி, துப்புரவு அலுவலர் அவர்களின் அறிக்கையின்படி மேலும் ஓராண்டு காலத்திற்கு 2018–2019–ஆம் ஆண்டிற்கு வழங்கிய அதே தொகைக்கு 10 பள்ளிகளில் உள்ள கழிவறைகளை சுத்தம் செய்யும் பணியினை நீட்டிப்பு செய்து ஒப்பந்ததாரர் திரு.ஆர்.பரமானந்தன் என்பவருக்கே அன்னாரின் ஒப்புதல் கடிதத்தின்படி பணி வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மேற்படி செலவினத்தை வசூல் செய்யப்படும் 2019–2020 ஆம் ஆண்டிற்கான கல்வி நிதியில் ஆண்டு பராமரிப்பு செலவினம் போக எஞ்சிய தொகையிலும், தூய்மை இந்தியா திட்ட நிதியிலும் மேற்படி தூய்மை இந்தியா திட்ட நிதி பற்றாக்குறை ஏற்படின் வருவாய் நிதியிலும் மேற்கொள்ளலாம்.

2. நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்க போதிய அவகாசம் இல்லை என்பதாலும் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரினாலும் சென்ற ஆண்டு தொகையினை விட கூடுதல் தொகைக்கு வழங்க வேண்டிய நிலைதான் ஏற்படும் என்பதை உத்தேசித்தும் ஒப்பந்ததாரர் திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் சம்மதக் கடிதம் மற்றும் துப்புரவு

அலுவலரின் அறிக்கையின் அடிப்படையில் 01.03.2019 முதல் மேலும் ஓராண்டு காலத்திற்கு பள்ளிகளில் உள்ள கழிவறைகளை பராமரிப்பு பணியினை நீட்டிப்பு செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5489/2015/எச்1)

**தீர்மான எண், நாள்** **598, நாள்.15.02.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.07

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணி மேற்கொள்ள பயன்படுத்தப்படும் தளவாட சாமான்கள் வாங்கி ஒரு வருட காலங்கள் பயன்படுத்தப்பட்டதால் மேற்கண்ட பொருட்கள் அனைத்தும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் உள்ளதால், பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி புதியதாக தளவாட சாமான்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.250000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.0532/2019/எச்1)

**தீர்மான எண், நாள்** **599, நாள்.15.02.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.08

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN60Z2921 டிராக்டருக்கு 2019–2020 ஆம் ஆண்டிற்கான இன்சூரன்ஸ் பிரிமியம் தொகை ரூ.9742/–ஐ செலுத்த யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியலின் அடிப்படையில் மேற்கண்ட செலவினத் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்கண்ட செலவினத் தொகையை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **600, நாள்.15.02.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.09**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான நேருஜீ பேருந்து நிலையத்தில் சென்னை நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26433/2015/பி1, நாள்.27.10.2015ன்படி, மேற்படி பேருந்து நிலையத்தின் கட்டுமானத்தினை இடித்து புதிதாக 25 வழித்தடங்களுடன் பேருந்து நிலையம் ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நிர்வாக அனுமதி அளித்ததன்படி, இந்நகராட்சி நகர்மன்றத்தில் 29.02.2016ம் தேதிய 573ம் தீர்மானத்தின்படியும், மேற்படி பேருந்து நிலையம் கட்டுமானங்கள் அகற்றப்பட்டு திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டது.

புதிய பேருந்து நிலையம் அமைக்க கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளதால், புதிய பேருந்து நிலையத்தின் அங்கீகாரத்தினை "B" பிரிவு தரத்தில் புதுப்பித்து வழங்க தேனி, மாவட்ட போக்குவரத்து அலுவலர் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் வாயிலாக ந.க.எண்.369/2017/அ2, நாள். 20.09.2018ன்படி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. எதிர் வரும் மே 2019 ஆம் மாதத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் மார்ச் 2019–இல் நடைமுறைக்கு வருவதால் மேற்படி புதிய பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு வசூல் செய்யும் உரிமம் முன் தேதியிட்டு ஏலம் நடவடிக்கை மேற்கொள்ளவும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை ரூ.300000/– (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.5431/2017/அ2)**
**தீர்மான எண், நாள் 601, நாள்.15.02.2019**
**தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பழைய நகராட்சி அலுவலக கட்டிட வளாகத்தில் வடக்குப் பக்கம் உள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 31.03.2019ல் மூன்றாண்டு குத்தகை காலம் முடிவடைகிறது. எனவே, 01.04.2019 முத. 31.03.2022 வரையிலான மூன்றாண்டு காலங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதியும், பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோர முன் வைப்புத் தொகை ரூ.100000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) என நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.5431/2017/அ2)**
**தீர்மான எண், நாள் 602, நாள்.15.02.2019**
**தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******